தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

கடித எண்.9601/எப்6-2/2024

நிதி அலுவலகம்
தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்,
மாதவரம் பால்பண்ணை,
சென்னை – 51.
நாள் : 22.04.2024

## சுற்றறிக்கை

பொருள்: ஓய்வூதியம் – வாழ்நிலை சான்றிதழ் – சமர்பித்தல் – தொடர்பாக.

பார்வை:
1. G.O.Ms. No.134, நிதி (ஓய்வூதியம்) துறை, Dt 26.05.2021.
2. G.O.Ms. No.136, நிதி (ஓய்வூதியம்) துறை, Dt 20.05.2022.
3. G.O.Ms. No.165,நிதி (ஓய்வூதியம்) துறை, Dt 31.05.2023.

***********

பார்வை 3-ல் கண்ட அரசாணையின் படி, இப்பல்கலைக்கழக ஓய்வூதியதாரர்கள் 2024-2025 ஆம் ஆண்டிற்கான தங்களது வாழ்நிலை சான்றிதழை தாங்கள் ஓய்வு பெற்ற மாதத்திலோ அல்லது அதற்கு அடுத்த மாதத்திலோ சமர்ப்பிக்கவேண்டும். தவறும் பட்சத்தில் அதற்கு அடுத்து வரும் மாதத்தில் ஓய்வூதியம் நிறுத்திவைக்கப்படும்.

குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் ஓய்வூதியதாரர் காலமான மாதத்திலோ அல்லது அதற்கு அடுத்த மாதத்திலோ வாழ்நிலை சான்றிதழ் சமர்ப்பிக்கவேண்டும்.

ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் இரண்டையும் பெறுபவர்கள் எந்த மாதம் முதலில் வருகிறதோ அந்த மாதத்தில் வாழ்நிலை சான்றிதழ் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**(எ.கா.)**

- ஓய்வூதியதாரர் ஜூலை மாதத்தில் ஓய்வு பெற்றிருந்தால், ஜூலை 1 முதல் ஜூலை 31 வரை ஏதேனும் ஒரு நாளில் வாழ்நிலை சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும் சமர்ப்பிக்க தவறும் பட்சத்தில் ஆகஸ்ட் மாதம் வரை ஒரு மாத கால அவகாசம் வழங்கப்படும். மேற்குறிப்பிட்ட மாதத்தில் வாழ்நிலை சான்றிதழ் சமர்ப்பிக்காத ஓய்வூதியதாரர்களின் ஓய்வூதியம் செப்டம்பர் மாதம் முதல் நிறுத்தப்படும்.

எனவே இப்பல்கலைக்கழக ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் மேற்காணும் அரசானையின்படி தங்கள் வாழ்நிலை சான்றிதழ் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஒம்/- J. ஜெகதீசன்
நிதி அலுவலர்

பெறுநர்,
அனைத்து ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள்.
நகல்: பேராசிரியர் மற்றும் தலைவர், (CECONDS) to be uploaded in our website and Pensioners Portal.
தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், சென்னை – 51.